மாநில அரசுகளின் உரிமைகளை திட்டமிட்டு பறிப்பதா? மத்திய அரசுக்கு ஸ்டாலின் கண்டனம்

சென்னை, ஜூலை.15

மாநில அரசுகளின் உரிமைகளைத் திட்டமிட்டுப் பறிக்கிறது மத்திய அரசு என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமூக வலைத்தளத்தில் கூறியிருப்பதாவது:

ஜம்மு காஷ்மீரின் மாநிலத் தகுதி மீண்டும் அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வரும் நிலையில், அங்கு அரங்கேறியுள்ள நிகழ்வுகள் அங்கே எந்தளவுக்கு நிலைமை மோசமாகி உள்ளது என்பதன் கொடூர நினைவூட்டலாக அமைந்துள்ளன.

மக்களால் தேர்த்தெடுக்கப்பட்ட முதல்மந்திரியான உமர் அப்துல்லா போராட்டத் தியாகிகளுக்கு மரியாதை செலுத்த விரும்பினார் என்ற ஒரே காரணத்துக்காக அவர் வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டு, சுவர் ஏறிக் குதிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு முதல் மந்திரியை இப்படியா நடத்துவது?

இது ஏதோ ஒரு மாநிலம் அல்லது ஒரு தலைவரைப் பற்றியது மட்டும் என்று பார்க்க முடியாது. தமிழ்நாடு தொடங்கி காஷ்மீர் வரை மத்திய பா.ஜனதா அரசானது தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளின் உரிமைகளைத் திட்டமிட்டுப் பறிக்கிறது. இன்றைக்கு காஷ்மீரில் நடப்பது எங்கு வேண்டுமானாலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எந்தத் தலைவருக்கும் நடக்கலாம். அனைத்து ஜனநாயக குரல்களும் இதனை ஓரணியில் கண்டித்தாக வேண்டும்.

படி படி என்கிற திராவிடத்தில் கிளை விட்டு விட்டு, படிக்காதே எனத் தடுக்கும் காவிக்கூட்டத்துக்குக் கால் அமுக்கும் துரோகிகளின் பேச்சுக்கு, தமிழ்நாட்டு மாணவர்களின் உணர்வைக் கோவையில் பதிலாகச் சொல்லியிருக்கிறது தி.மு.க. மாணவர் அணி. எதிர்க்கட்சித் தலைவருக்கு அறநிலையத்துறை சட்டமும் தெரியவில்லை, கடந்தகால அ.தி.மு.க. ஆட்சிகளிலும் கோவில் நிர்வாகங்கள் கல்வி நிறுவனங்களை நடத்தியதும் தெரியவில்லை.

ஆனால், தமிழ்நாட்டு மாணவர்கள் கல்வி பெறுவதற்கு எதிராகவோ, அதனைக் கொச்சைப்படுத்தியோ பேசினால் ஓரணியில் தமிழ்நாடு உங்களை ஓட ஓட விரட்டும், எங்கள் திராவிடன் வலிமை கூட்டம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

லடாக், அரியானா, கோவா மாநிலங்களுக்கு புதிய கவர்னர்கள்: ஜனாதிபதி உத்தரவு

புதுடெல்லி, ஜூலை.15

லடாக், அரியானா, கோவா ஆகிய 3 மாநிலங்களுக்கு புதிதாக கவர்னர்களை நியமித்து ஜனாதிபதி திரவுபதி முர்மு உத்தரவிட்டு உள்ளார்.



லடாக் யூனியன் பிரதேசத்தின் கவர்னராக இருந்த பி.டி.மிஸ்ரா ராஜினாமா செய்துள்ளார். அவரது ராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி திரவுபதி முர்மு ஏற்றுக்கொண்டார்.

இதனைத்தொடர்ந்து அவர் புதிய கவர்னரை அங்கு நியமித்துள்ளார். இதுபோல அரியானா மற்றும் கோவா மாநிலங்களுக்கும் புதிய கவர்னர்கள் நியமனத்துக்கான உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இதன்படி லடாக் யூனியன் பிரதேச கவர்னராக ஜம்மு காஷ்மீர் முன்னாள் துணை முதல்மந்திரி கவிந்தர் குப்தா நியமிக்கப்பட்டு உள்ளார். அரியானா மாநில கவர்னராக மேற்கு வங்காள பா.ஜனதா முன்னாள் தலைவர் ஆஷிம் குமார் கோஷ் நியமிக்கப்பட்டு உள்ளார். இங்கு இவருக்கு முன்னதாக பண்டாரு தத்தாத்ரேயா கவர்னராக இருந்தார்.

இதுபோல கோவா மாநில கவர்னராக முன்னாள் மத்திய மந்திரியும், விஜயநகர சமஸ்தான வாரிசுதாரருமான அசோக் கஜபதி ராஜு நியமிக்கப்பட்டு உள்ளார்.

இந்த நியமனங்கள் அந்தந்த அலுவலகங்களில் அவரவர் பொறுப்பேற்கும் தேதிகளில் இருந்து அமலுக்கு வரும் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

சேலம் போலீஸ் கமிஷனராக அனில்குமார் கிரி நியமனம்

தமிழகம் முழுவதும் 33 ஐ.பி.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம்

சென்னை, ஜூலை.15

தமிழகம் முழுவதும் 33 ஐ.பி.எஸ். அதிகாரிகள் நேற்று பணியிட மாற்றம் செய்யப்பட்டனர். சேலம் போலீஸ் கமிஷனராக அனில்குமார் கிரி நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பாக, அரசு நேற்று இரவு பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது:

★ மகேந்தர்குமார் ரத்தோடு மனித உரிமைகள் மற்றும் சமூக நீதி ஐ.ஜி.யாக பணியாற்றும் இவர், டி.ஜி.பி. அலுவலகத்தில் தலைமையக ஐ.ஜி.யாக நியமிக்கப்பட்டுள்ளார்.

★ பிரவீன்குமார் அபிநபு சேலம் போலீஸ் கமிஷனராக உள்ள இவர், சென்னை டி.ஜி.பி. அலுவலகத்தில் பொதுப்பிரிவு ஐ.ஜி.யாக மாற்றப்பட்டுள்ளார்.

★ சாமுண்டீஸ்வரி டி.ஜி.பி. அலுவலகத்தில் பொதுப்பிரிவு ஐ.ஜி.யாக பணியில் உள்ள இவர், மனித உரிமை மற்றும் சமூக நீதி ஐ.ஜி.யாக பொறுப்பு ஏற்பார்.

★ அனில்குமார் கிரி காத்திருப்போர் பட்டியலில் இருந்த இவர், சேலம் போலீஸ் கமிஷனராக பதவியேற்பார்.

★ தேவராணி வேலூர் சரக டி.ஐ.ஜி.யான இவர், காஞ்சீபுரம் சரக டி.ஐ.ஜி.யாக மாற்றப்பட்டார்.

★ தர்மராஜன் சென்னை உளவுப் பிரிவு இணை கமிஷனராக பணியாற்றும் இவர், வேலூர் சரக டி.ஐ.ஜி.யாக பதவியேற்பார்.

★ அருள் அரசு மாநில உளவு பிரிவில் சிறப்பு பிரிவு சூப்பிரண்டாக உள்ள இவர், பயங்கரவாத தடுப்பு பிரிவு சூப்பிரண்டாக பொறுப்பேற்பார்.

★ அருண் பால கோபாலன் தமிழ்நாடு கமாண்டோ படை சூப்பிரண்டாக பதவி வகிக்கும் இவர், சொத்துரிமை பாதுகாப்பு பிரிவு சூப்பிரண்டாக மாற்றப்பட்டார்.

★ சுஜித்குமார் சென்னை பாதுகாப்பு பிரிவு துணை கமிஷனரான இவர், சென்னை கோயம்பேடு துணை கமிஷனராக நியமிக்கப்பட்டுள்ளார்.

★ சாம்சன் சொத்துரிமை பாதுகாப்பு பிரிவு சூப்பிரண்டான இவர், மது விலக்கு அமலாக்கப்பிரிவு சூப்பிரண்டாக மாற்றப்பட்டுள்ளார்.

★ பெரோஸ்கான் அப்துல்லா கரூர் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டான இவர், ஆவடி கமிஷனரகத்தில் துணை கமிஷனராக நியமிக்கப்பட்டுள்ளார்.

★ ஆசிஸ் ராவத் காத்திருப்போர் பட்டியலில் இருக்கும் இவர், பொருளாதார குற்றப்பிரிவு தலைமையக சூப்பிரண்டாக பொறுப்பேற்பார்.

★ ராஜேஷ் கண்ணன் நாமக்கல் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டாக பணியாற்றும் இவர், மாநில உளவு பிரிவில் சிறப்பு பிரிவு சூப்பிரண்டாக மாற்றப்பட்டார்.

★ சிவபிரசாத் தேனி மாவட்ட சூப்பிரண்டான இவர், சிவகங்கை மாவட்ட சூப்பிரண்டாக நியமிக்கப்பட்டுள்ளார்.

★ விமலா லஞ்ச ஒழிப்பு சூப்பிரண்டாக பணியாற்றும் இவர், நாமக்கல் மாவட்ட சூப்பிரண்டாக பதவியேற்பார்.

★ மயில்வாகனன் மாநில போதைப் பொருள் தடுப்பு புலனாய்வு பிரிவு சூப்பிரண்டாக உள்ள இவர், வேலூர் மாவட்ட சூப்பிரண்டாக நியமிக்கப்பட்டுள்ளார்.

★ விஷ்வேஸ் பாலசுப்பிரமணியம் சாஸ்திரி சென்னை வடக்கு போக்குவரத்து போலீஸ் துணை கமிஷனரான இவர், அரியலூர் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டாக மாற்றப்பட்டுள்ளார்.

★ சினேக பிரியா சென்னை அண்ணாநகர் துணை கமிஷனரான இவர், தேனி மாவட்ட சூப்பிரண்டாக பதவி ஏற்பார்.

★ ஆய்மான் ஜமால் ஆவடி கமிஷனரகத்தில் துணை கமிஷனராக உள்ள இவர், ராணிப்பேட்டை மாவட்ட சூப்பிரண்டாக பொறுப்பேற்பார்.

★ விவேகானந்த சுக்லா ராணிப்பேட்டை சூப்பிரண்டான இவர், திருவள்ளூர் மாவட்ட சூப்பிரண்டாக மாற்றப்பட்டுள்ளார்.

★ உதய குமார் கோவை தெற்கு துணை கமிஷனராக பணியாற்றும் இவர், சென்னை அண்ணாநகர் துணை கமிஷனராக நியமிக்கப்பட்டுள்ளார்.

★ பாண்டியராஜன் சென்னை கொளத்தூர் துணை கமிஷனரான இவர், பழனி சிறப்பு காவல்படை சூப்பிரண்டாக பதவி ஏற்பார்.

★ அதிவீரபாண்டியன் சென்னை கோயம்பேடு துணை கமிஷனரான இவர், காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டார்.

★ ஷியாமளா தேவி சென்னை மது விலக்கு மத்திய பிரிவு சூப்பிரண்டான இவர், திருப்பத்தூர் மாவட்ட சூப்பிரண்டாக நியமிக்கப்பட்டுள்ளார்.

★ ஜோஸ் தங்கையா பொருளாதார குற்றப்பிரிவு வடக்கு மண்டல சூப்பிரண்டாக உள்ள இவர், கரூர் மாவட்ட சூப்பிரண்டாக பதவியேற்பார்.

★ குமார் கடல் சார்ந்த அமலாக்கப்பிரிவு சூப்பிரண்டாக பணியாற்றும் இவர், சென்னை தெற்கு போக்குவரத்து போலீஸ் துணை கமிஷனராக மாற்றப்பட்டுள்ளார்.

★ மாதவன் சைபர் கிரைம் (2) சூப்பிரண்டாக உள்ள இவர், கள்ளக்குறிச்சி மாவட்ட சூப்பிரண்டாக பொறுப்பேற்பார்.

★ மதிவாணன் வேலூர் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டான இவர், போதைப்பொருள் தடுப்பு பிரிவு புலனாய்வு சூப்பிரண்டாக பதவியேற்பார்.

★ சீனிவாச பெருமாள் திருவள்ளூர் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டாக பணியாற்றும் இவர், சிவில் சப்ளை சி.ஐ.டி மதுரை பிரிவு சூப்பிரண்டாக மாற்றப்பட்டார்.

★ பி.குமார் சென்னை தெற்கு போக்குவரத்து போலீஸ் துணை கமிஷனராக உள்ள இவர், சென்னை கொளத்தூர் துணை கமிஷனராக நியமிக்கப்பட்டுள்ளார்.

★ விஜயகார்த்திக் ராஜ் நாகப்பட்டினம் கடலோர பாதுகாப்பு குழும சூப்பிரண்டாக உள்ள இவர், கடல் சார்ந்த அமலாக்கப்பிரிவு சூப்பிரண்டாக பதவியேற்பார்.

★ கார்த்திகேயன் பயங்கரவாத தடுப்பு பிரிவு சூப்பிரண்டான இவர், கோவை தெற்கு துணை கமிஷனராக மாற்றப்பட்டுள்ளார்.

★ கனகேஸ்வரி பொருளாதார குற்றப்பிரிவு தலைமையக சூப்பிரண்டாக உள்ள இவர், அதே பொருளாதார குற்றப்பிரிவில் மத்திய மண்டல சூப்பிரண்டாக பதவியேற்பார்.

இவ்வாறு அரசு உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

சென்னை ஐகோர்ட்டு தலைமை நீதிபதியாக மணிந்திர மோகன் ஸ்ரீவத்சவா நியமனம்

சென்னை, ஜூலை.15

சென்னை ஐகோர்ட்டு தலைமை நீதிபதியாக இருப்பவர் கே.ஆர்.ஸ்ரீராம். இவர், வருகிற செப்டம்பர் 28ந் தேதியுடன் ஓய்வுபெற உள்ளநிலையில், ராஜஸ்தான் மாநில ஐகோர்ட்டுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இவருக்கு பதில் சென்னை ஐகோர்ட்டு தலைமை நீதிபதியாக, ராஜஸ்தான் ஐகோர்ட்டு தலைமை நீதிபதி மணிந்திர மோகன் ஸ்ரீவத்சவா நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை ஜனாதிபதி திரவுபதி முர்மு பிறப்பித்தார். மணிந்திர மோகன் ஸ்ரீவத்சவா 1964ம் ஆண்டு மார்ச் 6ந் தேதி சத்தீஷ்கார் மாநிலம் பிலாஸ்பூரில் பிறந்தவர். 1987ம் ஆண்டு அக்டோபர் 5ந் தேதி மத்தியபிரதேச மாநில பார் கவுன்சிலில் வக்கீலாக பதிவு செய்தார். ராய்கர் மாவட்ட நீதிமன்றம், மத்தியபிரதேச மற்றும் சத்தீஷ்கார் ஐகோர்ட்டுகளில் வக்கீலாக பணியாற்றினார்.

2005ம் ஆண்டு ஜனவரி 31ந் தேதி முதல் மூத்த வக்கீலாக பணியாற்றி வந்த இவர், 2009ம் ஆண்டு டிசம்பர் 10ந் தேதி சத்தீஷ்கார் ஐகோர்ட்டு நீதிபதியாக நியமிக்கப்பட்டார். 2021ம் ஆண்டு அக்டோபர் 18ந் தேதி ராஜஸ்தான் ஐகோர்ட்டு நீதிபதியாக நியமிக்கப்பட்டார். 2024ம் ஆண்டு பிப்ரவரி 6ந் தேதி ராஜஸ்தான் ஐகோர்ட்டு தலைமை நீதிபதியாக பதவி உயர்வு பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

8 இடங்களில் சிறு துறைமுகங்கள்; முதலீட்டாளர்களுக்கு தமிழக கடல்சார் வாரியம் அழைப்பு

சென்னை, ஜூலை.15

தமிழகத்தில் எட்டு இடங்களில், சிறு துறைமுகங்கள் அமைப்பதற்கு, முதலீட்டாளர்களுக்கு தமிழக கடல்சார் வாரியம் அழைப்பு விடுத்துள்ளது.

தமிழக நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் கீழ், தமிழ்நாடு கடல்சார் வாரியம் இயங்கி வருகிறது. இவற்றின் கட்டுப்பாட்டில், பல்வேறு மாவட்டங்களில், 17 சிறு துறைமுகங்கள் உள்ளன. அவற்றில் சில சரியான செயல்பாடு இன்றி உள்ளன.

இந்த துறைமுகங்களை செயல்பாட்டிற்கு கொண்டு வந்தால், ஏற்றுமதி, இறக்குமதி அதிகரிக்கும். அதன் வாயிலாக, தமிழக கடல்சார் வாரியத்திற்கு வருவாய் கிடைக்கும். உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்புகளும் பெருகும்.

அ.தி.மு.க., ஆட்சியில் இதற்கான திட்டம் வகுக்கப்பட்டு செயல்படுத்த முடியாமல் போனது. இந்த துறைமுகங்களை செயல்பாட்டுக்கு கொண்டு வர, முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக துறை அமைச்சர் எ.வ.வேலு, செயலர் செல்வராஜ், தமிழ்நாடு கடல்சார் வாரிய இயக்குநர் வெங்கடேசன் உள்ளிட்டோர் ஆலோசனை நடத்தினர்.

அதன்படி, 40 ஆண்டுகளுக்கு பின், கடலூர் துறைமுகத்தை செயல்பாட்டிற்கு கொண்டு வர, தனியார் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இதை தொடர்ந்து, செங்கல்பட்டு முகையூர், பனையூர், விழுப்புரம் மரக்காணம், கடலூர் சிலம்பிமங்களம், நாகப்பட்டினம் விழுந்தமாவடி, தூத்துக்குடி மணப்பாடு, மயிலாடுதுறை வானகிரி, கன்னியாகுமரி ஆகிய எட்டு இடங்களில், சிறு துறைமுகங்களை செயல்பாட்டிற்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான முதலீட்டாளர்களுக்கு, தமிழ்நாடு கடல்சார் வாரியம் அழைப்பு விடுத்துள்ளது. இந்த துறைமுகங்கள், 30 முதல் 99 ஆண்டுகள் வரை குத்தகைக்கு விடப்பட உள்ளன.

இங்கு கடல் சுற்றுலா போக்குவரத்து, கப்பல் கட்டுமான தொழில், மீன் உணவு தொழில்களை துவங்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் OMKARA ASSETS RECONSTRUCTION PVT. LTD.
பதிவு அலுவலகம்: எண்.9 எம்.பி.நகர், 1வது தெரு, கொங்கு நகர் விரிவாக்கம், திருப்பூர் 641607, தமிழ்நாடு, தொலைபேசி எண்: 0421221144
கார்ப்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47வது மாடி, என்.சி. கேல்கர் மார்க், ஆர்.ஜி. கட்கரி சௌக், தாதர் (மேற்கு) மும்பை 400028; தொலைபேசி எண்: 022-26544000 / 9323642445 / 9167490977

(பிற்சேர்க்கை IV A (விதி 8(6) & 9(1)ஐ பார்க்கவும்)

அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான விற்பனை அறிவிப்பு

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) சட்டம் 2002ன் விதி 8(6) மற்றும் 9(1)ன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.

ஈடுபெற்ற கடன் வழங்கிய லட்சுமி விலாஸ் வங்கியின் (எல்விபி) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியான (எல்விபி நவம்பர் 27, 2020 அன்று டிபிஸல் வங்கி இந்தியா லிமிடெட் (DBIL) உடன் இணைக்கப்பட்டது) கீழ் கையொப்பமிட்டவர் 1. M/S ஆர்வி ராசி கிரவ்கெட் மில் (கடன்தாரர்), 2. V இளஞ்சியம் 3. V சரவணன் (உரிமையாளர்/ அடமானதாரர்/ உத்தரவாததாரர்கள்) ஆகியோரால் ஈடுபெற்ற கடன் வழங்கியவரிடம் அடமானம்/ஈடாக வைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை சுவாதீனம் எடுத்துக் கொண்டார் என்று பொது மக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/உடன் கடன்தாரர்கள்/உத்தரவாததாரர்கள்/அடமானதாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. அதன் பின், ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் (ஓம்காரா பிஎஸ் 07/2023-24 அறக்கட்டளையின் அறங்காவலராக செயல்படுகிறது) 30.11.2023 தேதியிட்ட ஒதுக்கீட்டு ஒப்பந்தத்தின்படி கடன்தாரர்/உடன் கடன்தாரர்/உத்தரவாததாரர் மற்றும் டிபிஎஸ் பேங்க் இந்தியா லிமிடெட்டின் அடிப்படைப் பாதுகாப்புடன், மேலே கூறப்பட்ட நிலுவையில் உள்ள கடன்கள் முழுவதையும் பெற்றுள்ளது. மேற்கூறிய கடன்தாரர்/உடன் கடன்தாரர்/உத்தரவாததாரர்களிடம் இருந்து ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட், 31.08.2023 அன்று வரையிலான **ரூ.1,49,20,377.30 (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தொன்பது லட்சத்து இருபதாயிரத்து முன்னூற்று எழுபத்தியேழு மற்றும் முப்பது பைசா மட்டும்)** மற்றும் வட்டி மற்றும் செலவுகளை வருங்காலக் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் **06.08.2025 அன்று காலை 11:00 மணி முதல் மதியம் 12:00 மணி வரை** (ஏலங்களைச் சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி மற்றும் நேரம் 05.08.2025 மாலை 6:00 மணிக்குள்) 'எங்கே இருக்கிறதோ அப்படியே', 'உள்ளது உள்ளபடி', 'எந்தவித மாற்றமும் இல்லாமல்' என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

ஈடுபெற்ற சொத்துக்களை மீட்பதற்காக, கிடைக்கும் நேரத்தைப் பொறுத்த வரையில், SARFAESI சட்டம், 2002ன் பிரிவு 13(8)ன் படி விதிகளுக்கு இணங்க கடன்தாரர்/உடன் கடன்தாரர்/உத்தரவாததாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அசையாச் சொத்துக்கள், சிதர்வ் விலை மற்றும் டேவணித் தொகை டெபாசிட் மற்றும் தெரிந்த வரையிலான வில்லங்கம் (ஏதேனும் இருந்தால்) அது குறித்த விவரம் பின்வருமாறு:

சொத்து குறித்த விவரம்: எஸ்.எப்.எண். 172/2A, மனை எண். 7,8,13 & 14, கதவு எண். 1415/6, 1415/8, செந்தில்நாத் நகர், செங்கம்பட்டி சாலை, விராலிமலை, இலுப்பூர், புதுக்கோட்டை மாவட்டம். விஸ்தீரணம் 8800 சதுர அடி

மின்னணு ஏலத் தேதி : 06.08.2025 அன்று காலை 11.00 மணி

ரிசர்வ் விலை : ரூ.71,00,000	EMD : 7,10,000	குறைந்தபட்ச ஏல அதிகரிப்பு தொகை : ரூ.70,000/-
ஆய்வுத் தேதி : 25.07.2025 மதியம் 2.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை		
பங்கேற்பு ஏலக் கடிதம்/ KYC ஆவணம்/ EMD சான்று சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி மற்றும் நேரம்: 05.08.2025 மாலை 6:00 மணிக்குள்		
தெரிந்தவரை வில்லங்கம் : தெரியவில்லை	சுவாதீன நிலை : அடையாளம்	

விதிமுறைகள் & நிபந்தனைகள்: 1. OARPLஇன் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநர் M/S. சி1 இந்தியா பிரைவேட் லிமிடெட், குர்கான் மூலம் ஏலம் 'ஆன்லைனில்' நடத்தப்படும். ஆன்லைன் ஏலத்திற்கான ஏலப் படிவம், அறிவிப்பு, ஆன்லைன் ஏல விற்பனைக்கான பொதுவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய மின்னணு ஏல டெண்டர் ஆவணம் https://www.bankeauctions.com (உதவிக்கான மின்னஞ்சல் முகவரி : support@bankeauctions.com உதவிக்கான மொபைல் எண். +91 7291981124/25/26). என்ற இணையதளத்தில் கிடைக்கிறது. 2. EMD தொகையை டெபாசிட் செய்து, உள்நுழைவு ஐடி மற்றும் கடவுச்சொல்லை உருவாக்குதல், தரவைப் பதிவேற்றுதல், ஏலத்தைச் சமர்ப்பித்தல், மின்னணு ஏலச் செயல்முறை குறித்த பயிற்சி போன்றவற்றில் உதவி தேவைப்படும் ஏலதாரர்கள், மின்னணு ஏல சேவை வழங்குனரைத் தொடர்பு கொள்ளலாம் "M/S. சி1 இந்தியா பிரைவேட் லிமிடெட்", உதவிக்கான தொலைபேசி எண்: +91 7291981124/25/26, உதவிக்கான மின்னஞ்சல் முகவரி : support@bankeauctions.com, திரு. பாவிக் பாண்டியா, மொபைல்: 8866682937 மின்னஞ்சல் முகவரி : maharashtra@c1india.com. 3. சொத்து தொடர்பான ஏதேனும் விளவலுக்கு அல்லது சொத்து அட்டவணை செய்தி குறித்த ஆய்வுக்கு, ஆர்வமுள்ள நபர் சம்பந்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை தொடர்பு கொள்ளலாம்: **ஆஷிஷ் நங்கியா (மொபைல் — +91 9323642445), மின்னஞ்சல்:** ashish.nangia@omkaraarc.com அல்லது வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் மேலே குறிப்பிட்டுள்ள முகவரியில் தொடர்பு கொள்ளலாம். 4. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு தெரிந்தவரை மற்றும் தகவலின் படி, மேலே உள்ள அட்டவணையில் கூறப்பட்டுள்ளதைத் தவிர, சொத்து மீது எந்தவித வில்லங்கமும் இல்லை. 5. ஏலங்களைச் சமர்ப்பித்த அனைத்து ஏலதாரர்களும், மின்னணு ஏல விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் படித்துப் புரிந்துகொண்டதாகக் கருதப்படுவார்கள், மேலும் அவற்றுக்குக் அவர்கள் கட்டுப்பட்டவர்கள் ஆவார்கள். மேலும், தொடர்புடைய பரிமாற்றங்களின் அடிப்படையில், 2016 ஆம் ஆண்டு நொடித்தல் மற்றும் திவால்நிலைச் சட்டத்தின் பிரிவு 29A இன் நோக்கத்தின்படி ஏலதாரர்கள் பங்கேற்றதாகக் கருதப்படும். ஏலதாரர்கள் நொடித்தல் மற்றும் திவால்நிலைச் சட்டம், 2016ன் பிரிவு 29ஸ்ன் கீழ் ஏலத்துடன் இணங்கி அறிவிப்பை வழங்க வேண்டும், செலுத்தப்பட்ட அதே தொகை தோல்வியுற்றால் பறிமுதல் செய்ய ப்படும்.

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு http://omkaraarc.com/auction.phpஇல் **வழங்கப்பட்ட இணையப்பைப் பார்க்கவும்.**

கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 2002 விதி 8(6) மற்றும் 9(1)ன் கீழ் விற்பனைக்கான சட்டப்பூர்வ அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 2002 விதி 8(6) மற்றும் 9(1) மற்றும் 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் கீழ் மேலே குறிப்பிடப்பட்ட தேதி மற்றும் நேரத்தில் பொது ஏலத்தின் மூலம் விற்பனையை நடத்துவது பற்றி அவர்களுக்குத் தெரிவிக்கவும், அவர்கள் விரும்பினால் மேலே குறிப்பிட்டுள்ள நிலுவைத் தொகையை கட்டணம் மற்றும் செலவுகளுடன் செலுத்துவதன் மூலம் சொத்துக்களை மீட்டுக்கொள்ளவும், மேற்கூறிய கடன் கணக்கின் கடன்தாரர்(கள்) / உடன் கடன்தாரர்(கள்) / அடமானதாரர்களுக்கு இந்த அறிவிப்பானது பதினைந்து (15) நாட்களுக்கான ஒரு கட்டாய அறிவிப்பாகும். பணம் செலுத்தத் தவறினால், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி/ஈடுபெற்ற கடன் வழங்கியவர் விருப்பப்படி, கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 2002ன் விதி 8 (5)ன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட எந்த முறையிலும் சொத்து விற்கப்படும்.

ஒப்பம்/ அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி

தேதி: 15.07.2025 ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட்

இடம்: மும்பை ("ஓம்காரா பிஎஸ் 07/2023-24 அறக்கட்டளையின்" அறங்காவலராக செயல்படுகிறது)

Muthoot Mercantile Limited
Regd.Office: 'Muthoot Floors', Opp: W & C Hospital, Thycaud, Trivandrum, Kerala - 695014

GOLD AUCTION NOTICE

Notice is hereby given for the information of all concerned that Gold ornaments pledged with the under mentioned branches of the company in different branches of **TAMILNADU** for the period which were overdue for redemption and have not been redeemed so far in spite of repeated notices,will be auctioned on **24.07.2025** at respective branches. Bidders/customers can participate for auction by remitting EMD. In case successful bidding does not take place on this date, pending packets will be auctioned through Online platform via M/s Shriram Automall India Limited (SAMIL) post auction date. Contact details: ph: 0471 - 2774800

PLEDGE NOS: **TAMILNADU-MARTANDAM Vadassery:-** 49601,49686, 49711,49712, 49724,49725,49732, **Kaliyikkavila:-**66806,66846,66847, 66849,66850, 66891, 66905, 66929, **Kulasekharam Mkt:-** 273355, 273504, 273505, 273512, 273527, 273545, 273565, 273623, 273714, 273734, 273752, 273807, 273828, 273856, 273874, 273934, 273937, 273947,273949,273984,273988,274008,274026,274037, **Marthandam:-** 69153, 69154, 69164, 69212, 69242, 69265, 69284, 69296, 69327, 69329, 69339, 69348, 69365, 69370, 69389, 69393, **Kulasekharam Con :-** 111432,111445,111491,111500, 111513,111562, 111563,111581, 111618,111620, 111650,111656,111678,111681, 111686,111702,111733,111803, 111834, 111838, 11851, 111858,111874, 111881,111905,111931, 111998,112026,112027, 112030, 112031, 112067, 112081,112093,112104, 112105, 112114, 112159, 112165, 112171, 112180, 112182, 112185,112204,112212,112223, 112230,112232,112238, 112249, 112259, 112262,112267, 112268, 112270,112279,112280,112292, 112299,112313,112314,112320, 112331, 112332, 112334,112341, 112343,112346, 112347,112353, 112366, 112369, 112373, 112392, 112401,112405,112408,112419, **Attoor:-** 99278,99342,99389, 99415, 99426,99498, 99547, 99555,99595, 99620,99638,99758, 99786, 99843, 99875,99888, 99890,99928,99944, **Kumarapuram:-** 38622, **Kottaram:-** 40840,40913, 41045, 41053, 41059,41116,41129,41137, 41138,41158, **Kanyakumari:-** 35682, 35729, 35787, 35849, 35922, 36027, **Kappukadu:-** 22707,22804, 22837,22861, 22862,22868, 22874,22886, 22896,22897,22900,22909, 22924, 22925, 22929, **Viluthayambalam:-** 20433, **Ambalakkada:-** 39880,40084,40132,40189,40195, 40196,40197,40217,40239,40243,40244,40260,40262,40274,40288,40300, **Manjalummoodu:-** 33024,33056,33103, **Nadaikkavu:-** 24850,24875,24889, 24919,24977, 24980, 24981,25005,25010, 25039,25044,25072,25079,25082,25084,25087,

Place: Trivandrum, Date: 15.07.2025 For Muthoot Mercantile Limited, Chairman

homefirst We'll take you home

Home First Finance Company India Limited
CIN: L65990MH2010PLC240703,
Website: homefirstindia.com Phone No.: 180030008425 Email ID: loanfirst@homefirstindia.com

சுவாதீனம் எடுத்த அறிவிப்பு

Ref: **கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 2002, விதி 8, துணை விதி (1)ன் கீழ் சுவாதீனம் எடுத்த அறிவிப்பு**

கீழே கையொப்பமிட்டுள்ள ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச்